வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.335/ஆ5/2024, நாள். 01.02.2024

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று இலக்கியக் கூட்டம் நடத்துதல் தொடர்பில் பள்ளி மாணாக்கர்களுக்கு பேச்சுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்குதல் – மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை

1. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.2)த் துறை அரசாணை (நிலை) எண். 163, நாள்.02.09.2023
2. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.14/2024, நாள். 29.01.2023

•••••

பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி, 2023–2024ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி துறையின் தமிழ் மன்றம் சார்பில் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் பிறந்த நாளன்று இலக்கியக் கூட்டம் நடத்துதல் தொடர்பில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி கீழ்காணும் படி நடைபெறவுள்ளது.

**நாள்– 12.02.2024 (திங்கள் கிழமை)**
**நேரம் – காலை 9.00 மணி**
**இடம் – ஊரிசு கல்லூரி வளாகக் கூட்ட அரங்கம், வேலூர் மாவட்டம்.**

பேச்சு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசுத்தொகையாக ரூ.5,000/– இரண்டாம் பரிசுத்தொகையாக ரூ.3,000/– மூன்றாம் பரிசுத்தொகையாக ரூ.2,000/– மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பேச்சு போட்டியில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு பரிசுதொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் 13.02.2024 (புதன்கிழமை) அன்று வேலூர் நடத்தப்பெற உள்ள இலக்கியக்கூட்ட நிகழ்வில் தமிழறிஞர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களில் ஒரு பள்ளிக்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும். போட்டிக்குரிய தலைப்பு பெரும்பாலும் திரு கு.மு. அண்ணல் தங்கோ திரு கிருபானந்தவாரியார், பேராசிரியர் முனைவர் மு. வரதராசன் உள்ளிட்ட தமிழறிஞர் பெருமக்கள் பற்றியே அமையும். போட்டிக்கான தலைப்புகள் முன்னரே தெரிவிக்கப்படமாட்டாது. போட்டி தொடங்கும் முன்புதான் தலைப்பு அறிவிக்கப்பெறும்.

எனவே, மேற்காண் விவரங்களின் அடிப்படையில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களில் இப்பேச்சுப் போட்டிக்கு பள்ளிக்கு ஒருவர் வீதம் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தலைமையாசிரியர்கள் /மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று தவறாமல் ஒப்படைக்கவேண்டும் இதை தலைமையாசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மாணாக்கர்களுக்கு தெரியப்படுத்தி மாணாக்கர்கள் பங்கேற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் தலைமையாசிரியர்கள் / மெட்ரிக் பள்ளி முதல்வர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்

5/7 01.02.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர்,
அனைத்து அரசு /நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
   தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   வேலூர் மாவட்டம்.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி), வேலூர் மாவட்டம்.

   தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது. )
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)